**திருச்சிராப்பள்ளி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் – திருமதி.கோ.கிருஷ்ணப்பிரியா., பி.எஸ்.சி.பி.எட்.,எம்.ஏ.,எம்.பில்.,**

**மூ.மு.எண்.008807/அ1/2024 நாள். 01.2025**

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருச்சி கல்வி மாவட்டம் – கோவில்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.அ.அன்பழகன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:
1. சென்னை–03, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு செயலரின் கடிதம் எண்.1975/PSD-C2/2023 நாள்.25.08.2023.
2. அரசாணை எண்.151, பள்ளிக்கல்வித்(ப.க.1–1) துறை நாள்.09.09.2022
3. கோவில்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கடித ந.க.எண்.131/2024 நாள். 09.12.2024

-----

திரு.அ.அன்பழகன் என்பார் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி –IV –ன் கீழ் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டம், திருச்சி கல்வி மாவட்டம், கோவில்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 29.09.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

தனியருக்கு பார்வை (3) ல் காணும் கடிதத்தின்படி இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை கோரும் கருத்துருக்கள் பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது.

மேற்காண் கருத்துருக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தனியருக்கு கீழ்காணும் நிபந்தனைகளின்படி இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பெயருக்கெதிரே குறிப்பிட்ட தேதியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| பணியாளர் பெயர் / பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|
| திரு.அ.அன்பழகன், இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, கோவில்பட்டி, | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

நிபந்தனைகள்

1. தனியர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ய வேண்டும்.
2. தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினையும், மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாக தேர்ச்சிப்பெற வேண்டும்.

3. பவானிசாகர் அடிப்படைப்பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த அடுத்த நாள் முதல் இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்க வேண்டும்.

மேற்கண்ட விவரத்தினை சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு - அசல் பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

8/1/25

பெறுநர்
திரு.அ.அன்பழகன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
கோவில்பட்டி,(உரிய வழியாக)

நகல்

1. தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
கோவில்பட்டி
2. மாவட்டக் கல்வி அலுவலர், திருச்சி (இ,நி,க)
3. கோப்பிற்கு